PlanetRead
Literacy for a Billion

Movie: Roja Malare
Year: 1997

Song: Azhogoviyam
Lyricist: T M Jayamurugan

அழகோவியம் உயிரானது
புவி மீதிலே நடமாடுது
கவியாயிரம் மனம் பாடுது
புது காவியம் அரங்கேறுது
லவ் ஸா மோனாஸா
அழகோவியம் உயிரானது
புவி மீதிலே நடமாடுது
என் கவியானவள்
கண்ணில் வந்து கலையானவள்
என் கனவானவள்
நினைவில் வந்து இனிதானவள்
இசையானவள் சுவையானவள்
என் வானிலே நிலவானவள்
மலர் முகம் மனம் தொடும்
தினம் தினம் மணம் தரும்
லவ் ஸா மோனாஸா
அழகோவியம் உயிரானது
என் உயிரானவள்
புனிதமான உறவானவள்
என் வாழ்வானவள்
வசந்தம் தந்து
நிறைவானவள்
புதிரானவள் புகழுமானவள்
மனதாள்பவள் ஆ...
மலர் என்னவள்
அவள் ஒரு தனி சுகம்
அதில் ஒரு தனி சுகம்
லவ் ஸா ஹேஹே மோனாஸா
அழகோவியம் உயிரானது
புவி மீதிலே நடமாடுது
கவியாயிரம் மனம் பாடுது
புது காவியம் அரங்கேறுது
லவ் ஸா மோனாஸா

*Disclaimer: PlanetRead does not own these lyrics and is not using them for any commercial purpose. For over 20 years, PlanetRead has been subtitling Bollywood songs for mass literacy. These lyrics are being offered as part of PlanetRead's literacy development initiative.*

*PlanetRead is a tax-exempt, not-for-profit: 501(c) (3) in the United States and 80(G) in India.*